சுருக்கம்

கல்லூரிக் கல்வி – சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – எ.பி அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை சார்பில் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், செட்டிப்பாளையம் கிராமம் என்னுமிடத்தில், "எ.வி.பி. கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி" என்கிற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை 2015–16–ஆம் கல்வியாண்டு முதல் துவங்குவதற்கு அனுமதி – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

உயர் கல்வித் (இ1) துறை

அரசாணை (நிலை) எண். 163

நாள்:9.7.2015.
மன்மத, ஆனி 24,
திருவள்ளுவராண்டு 2046,
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.356, உயர் கல்வித் (இ1) துறை, நாள்: 29.9.2009.
2. அரசாணை (நிலை) எண்.4, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.7.1.2011.
3. அரசுக் கடிதம் எண்.17861/இ1/11–1, உயர்கல்வி (இ1) துறை, நாள்.16.9.2011.
4. அரசாணை (நிலை) எண்.40, உயர் கல்வித் (இ1) துறை, நாள். 28–02–2014.
5. அரசாணை (நிலை) எண்கள். 107, 108 மற்றும் 109, உயர் கல்வித் (இ1) துறை, நாள்.14.5.2015.
6. கோவை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநரின் ஆய்வறிக்கை ந.க.எண்.2152/அ5/2015, நாள்.26.06.2015.
7. திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலரின் ஆய்வறிக்கை ந.க. எண். 8298/2015/உ1, நாள்.27.06.2015.
8. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.41894/ஆர் 4/2015, நாள்.30.6.2015

**** *** ****

ஆணை :–

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், செட்டிப்பாளையம் கிராமம் என்னுமிடத்தில், "எ.வி.பி. கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி" என்கிற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை 2015–16–ஆம் கல்வியாண்டில் தொடங்குவதற்கு, எ.பி அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை சார்பில் விண்ணப்பம் பெறப்பட்டு, கோவை, மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் ஆய்வறிக்கை மற்றும் திருப்பூர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரின் பரிந்துரை பெறப்பட்டது எனவும், இக்கல்வி முகமை பின்வருவனவற்றை நிறைவு செய்துள்ளதாகவும், மேலே எட்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார்:–

அ) கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் கல்வி முகமையின் பெயரில் கூட்டாக ரூ.20,00,000/– (ரூபாய் இருபது லட்சம் மட்டும்) வைப்புத்தொகை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் இரசீது எண். M 531821, நாள். 13.4.2015–இல் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ) இக்கல்வி முகமைக்கு திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், செட்டிப்பாளையம் கிராமத்தில் சர்வே எண்.125/1B மற்றும் 131/1–ல் 2.00 ஏக்கர் நிலம், சொந்தமாக உள்ளது.

இ) மேற்கண்ட நிலம் தொடர்ச்சியாக உள்ளது என செட்டிப்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளார்.

AVP COLLEGE OF ARTS & SCIENCE
Date: 20/8/15
TIRUPUR - 641 652

ஈ) துவங்கப்பட உள்ள கல்லூரி அமையவுள்ள 20 கி.மீ. சுற்றளவில் 9 பள்ளிகள் மற்றும் 5 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உ) சுயநிதி கல்லூரிகள் தொடங்கி நடத்துவது தொடர்பாக அரசாணைகளில் விதித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதாக கல்வி முகமை ரூ.20 /—க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்த பத்திரம் அளித்துள்ளது.

ஊ) இக்கல்லூரிக்கென கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் (RCC) முதலாமாண்டு கல்லூரி நடத்த போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிலையில், கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் ஆய்வறிக்கை மற்றும் திருப்பூர், மாவட்ட வருவாய் அலுவலர் பரிந்துரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், இக்கல்லூரியை தொடங்குவதற்கு அனுமதி வேண்டியுள்ள சார்ந்த கல்வி முகமையின் சார்பில் பெறப்பட்ட ஆவணங்களுடன் இக்கருத்துருவினை பரிந்துரை செய்து, உரிய ஆணையினை வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசை வேண்டியுள்ளார்.

2. மேலே ஏழாவதாக படிக்கப்பட்ட திருப்பூர், மாவட்ட வருவாய் அலுவலரின் 27-06-2015ஆம் நாளிட்ட அறிக்கையில், திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், செட்டிப்பாளையம் கிராமம் என்னுமிடத்தில் எ.பி அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை, திருப்பூர் மாவட்ட பதிவாளர் அலுவலக பத்திர எண்.58/2014, நாள்.15.9.2014—ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் சர்வே எண்.125/1B மற்றும் 131/1—ல் உள்ள 2.00 ஏக்கரில் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன எனவும் திருப்பூர் வடக்கு வட்டம், செட்டிபாளையம் கிராமத்தில் மேற்படி சர்வே எண்ணில் கல்லூரி கட்டிடங்கள் கட்டுவதற்கு திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமத்திடம் கட்டிட கட்டுமான வரைபட அனுமதியானது பெறப்பட்டுள்ளது எனவும் மேலும் திருப்பூர் மாநகராட்சி ஆணையரால் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டு அவ்வாறே கட்டிடம் கட்டப்பட்டுள்ளது எனவும் விதிமுறைகள் ஏதும் மீறப்படவில்லை எனவும் தற்போது புதிதாக துவங்கப்பட உள்ள எ.வி.பி. கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரியில் B.A. (English Literature), B.Com., B.Com., (Professional Accounts) and B.Sc.,(Maths) ஆகிய நான்கு பாடப்பிரிவுகள் மட்டுமே துவங்குவதற்கு தற்போது விண்ணப்பித்துள்ளதாக கல்லூரி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளதால் அறிவியல் ஆய்வகங்கள் ஏதும் தற்போது அமைக்கப்படவில்லை எனவும் மேலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை எனவும் எனவே திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், செட்டிபாளையம் கிராமம், க.ச.125/1B மற்றும் 131/1 ஆகிய எண்ணில் உள்ள எ.பி அருள்ஜோதி கல்வி அறக்கட்டளைக்கு சொந்தமான 2.00 ஏக்கர் பூமியில் எ.வி.பி. கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி துவங்குவதற்கு அனுமதி வழங்க தலத்தணிக்கை மற்றும் ஆய்வு மேற்கொண்டு சரிபார்ப்பு பட்டியலுடன் பரிந்துரை செய்துள்ளார்.

3. மேலே எட்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கல்லூரிக் கல்வி இயக்குநரால் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட, எ.பி அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை சார்பில் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், செட்டிப்பாளையம் கிராமம் என்னுமிடத்தில், "எ.வி.பி. கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி" என்கிற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை துவங்குவதற்கு அனுமதி வேண்டுகின்ற இக்கருத்துரு, முறையே மேலே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு மற்றும் ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணைகள், கடிதங்கள், கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் ஆய்வறிக்கை கல்லூரிக் கல்வி இயக்குநரால் அனுப்பப்பட்ட பின்வரும் ஆவணங்கள் மற்றும் திருப்பூர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோரின் பரிந்துரைகள் ஆகியவைகளின்படி, அரசால் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது :-

1) இக்கல்லூரியின் நில உரிமை குறித்து கூடுதல் அரசு வழக்கறிஞரின் சட்டக் கருத்து

AVP COLLEGE OF ARTS & SCIENCE
TIRUPUR - 641 652
Date:

2) நில பயன்பாட்டு சான்றிதழ் திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

3) கல்லூரி கட்டடத்திற்கான திட்ட அனுமதி மற்றும் கட்டட வரைப்பட அனுமதி திருப்பூர், உள்ளூர் திட்டக் குழுமம், உறுப்பினர் செயலர் (பொ) அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. திருப்பூர் மாநகராட்சி ஆணையரால் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

5) திருப்பூர், காவல்துறை கண்காணிப்பாளரிடமிருந்து போக்குவரத்து தடையின்மை சான்று, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு, சுகாதாரத்துறை, மற்றும் தீயணைப்புத் துறைகளிடமிருந்து தடையின்மை சான்றும் பெறப்பட்டுள்ளது.

6) கல்லூரிக் கட்டடத்திற்கான நிலைத்தன்மை சான்று திருப்பூர், பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

7) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், செட்டிப்பாளையம் கிராமம் க.ச.125/1B மற்றும் 131/1 ஆகிய சர்வே எண்கள் திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்டது என திருப்பூர் வட்டாட்சியர் சான்றளித்துள்ளார்.

8) திருப்பூர் வட்டாட்சியர் அவர்கள் புல எண்.125/1B மற்றும் 131/1–ல் உள்ள நிலங்கள் தமிழ்நாடு சீர்த்திருத்தச் சட்டம் 1961–ன் கீழ் கவரப்படவில்லை எனவும் மேற்படி பூமியானது தற்போது விவசாயம் செய்யப்படாமல் தரிசாக உள்ளது எனவும் சான்றளித்துள்ளார்.

9) நில உபயோகச் சான்று திருப்பூர், உள்ளூர் திட்ட குழுமத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது.

4. மேற்கண்ட நிலையில், கல்லூரிக் கல்வி இயக்குநரின் பரிந்துரை, திருப்பூர், மாவட்ட வருவாய் அலுவலரின் பரிந்துரை மற்றும் கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் ஆய்வறிக்கை மற்றும் மேலே பத்தி 1 மற்றும் பத்தி 3 (1) முதல் 3 (9)–இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், 2015–16–ஆம் கல்வியாண்டு முதல், எ.பி அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை சார்பில் "எ.வி.பி. கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி" என்ற பெயரில், புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை, திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், செட்டிப்பாளையம் கிராமம் என்னுமிடத்தில் புல எண். 125/ 1B மற்றும் 131/1 –ல் உள்ள 2 ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டுள்ள நிரந்தரக் கட்டடத்தில் (RCC கட்டடம்), முதலாமாண்டில் B.A. (English Literature), B.Com., B.Com., (Professional Accounts) and B.Sc.,(Maths) ஆகிய பாடப்பிரிவுகளுடன் துவங்குவதற்கு Certificate under section 37(B) of Tamil Nadu Land Reforms (Land fixation and ceiling) Act, 1961-ஐ சார்ந்த கல்லூரி முகமையானது மூன்று மாத காலத்திற்குள் பெற்று அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்கின்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

5. மேற்கண்ட அனுமதி, கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டது எனவும் அரசு ஆணையிடுகிறது: –

(1) கல்லூரியின் நிரந்தர இடத்தில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளதற்கான உரிய சான்றிதழுடன் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(2) அனைத்துப் பாடப்பிரிவுகளும் தொடங்குவதற்கு முன்பே சார்ந்த பல்கலைக்கழகத்தின் இணைவு பெறுதல் வேண்டும்.

(3) மேலே பத்தி 4–இல் தெரிவிக்கப்பட்டுள்ள இடம் கல்லூரி பயன்பாட்டிற்காக மட்டும் பயன்படுத்தப் படவேண்டும்.

(4) அரசு எவ்விதமான நிதியுதவியையும் எத்தருணத்திலும் இக்கல்லூரிக்கு வழங்காது.

(5) சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குவது தொடர்பான அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கல்வி முகமை முழுமையாக நிறைவு செய்யவேண்டும்.

AVP COLLEGE OF ARTS & SC. TIRUPUR Date: 20/4/18

(6) அரசு / பல்கலைக்கழகம் அனுமதித்துள்ள பாடப்பிரிவுகளை தவிர வேறு எந்த பாடப்பிரிவுகளையும் கல்வி முகமை கல்லூரியில் தொடங்கக் கூடாது.

(7) பல்கலைக்கழக நல்கைக்குழு / பல்கலைக்கழகம் / அரசு நிர்ணயித்துள்ள அளவுகோல் மற்றும் கல்வித்தகுதிகளின் அடிப்படையில் மட்டுமே கல்லூரியின் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் அமர்த்தப்பட வேண்டும்.

(8) கல்விமுகமை, அரசு அவ்வப்போது நிர்ணயம் செய்யும் ஏற்புடைய கட்டணங்களைத் தவிர முதலீட்டாளர் கட்டணம் அல்லது நன்கொடை ஆகியவற்றை எந்தவிதத்திலும் பெறக்கூடாது.

(9) அரசு/கல்லூரிக் கல்வி இயக்குநரால் நிர்ணயம் செய்யப்பட்ட படிப்புக்கட்டணம், சிறப்புக்கட்டணம், விண்ணப்பக்கட்டணம், பதிவுக்கட்டணம், ஆய்வுக் கட்டணம், காப்புறுதிக்கட்டணம் ஆகியவற்றை மட்டுமே கல்லூரி மாணாக்கரிடம் வசூலிக்கவேண்டும்.

(10) கல்விமுகமை, அரசு/கல்லூரிக் கல்வி இயக்குநர் அவ்வப்போது அறிவிக்கும் மாணாக்கர் சேர்க்கைக்கான நெறிமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்றவேண்டும். மேலும் அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து, 50 விழுக்காடு இடங்கள் மற்றும் சார்ந்த பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்படும் அனைத்து கூடுதல் இடங்களையும் நிரப்ப வேண்டும்.

(11) கல்விமுகமை, இக்கல்லூரியை நிர்வகிக்க முடியாமல் போகும் நிலையில் அதனை அரசு ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முன்வராது.

(12) மின் இணைப்பு தரச்சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

(13) அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள இதர நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு பின்னர் உரிய அறிக்கை பெற்று ஆய்வு மேற்கொண்டு உரிய நிரந்தரக் கட்டடத்தில் அனைத்து வசதிகளுடன் சிறந்த முறையில் செயற்பட்டு வந்தால் மட்டுமே தொடர்ந்து இக்கல்லூரி செயல்பட அனுமதிக்கப்படும்.

(14) கல்லூரியில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களை நிரப்பும் போது மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சதவீத இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

(15) கல்லூரியில் தகுதிவாய்ந்த பார்வையற்ற / மாற்றுதிறனாளிகள் உதவி பேராசிரியர் பணியிடங்களில் நியமனம் செய்யப்பட வேண்டும். இவர்களுக்கு 25 சதவீதம் சம்பள மானியம் அரசால் அளிக்கப்படும்.

(16) கல்லூரி கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு மற்றும் சூரிய ஒளிசக்தி அமைப்புகள் ஆகியவை ஏற்படுத்தப்பட வேண்டும்.

( ஆளுநரின் ஆணைப்படி )

அபூர்வா
அரசு செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர் மாவட்டம்.
மாவட்ட வருவாய் அலுவலர், திருப்பூர் மாவட்டம்.
பதிவாளர், பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மாவட்டம்.
செயலர் / தலைவர், ஏ.பி. அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை, எஸ்.எப்.எண். 125/1, செட்டிபாளையம் கிராமம், திருமுருகன்பூண்டி அஞ்சல், திருப்பூர் மாவட்டம் – 641 652.
நகல்: மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளரின் தனிச் செயலர், உயர் கல்வித்துறை, சென்னை –9.
இ.கோ/ உதிரி.

20/8/15 (DR. S. MUTHUSAMY)

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர். 9.7.15

AVP COLLEGE OF ARTS & SCIENCE TIRUPUR-641 652 Date: 20/8/15